# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

## 2017 -2018

## தமிழ்மொழி

### வளர் தமிழ் 6

சுட்டெண்:.............................................................. நேரம்: 150 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. உயிரெழுத்துகள்

அ) 18 ☐ ஆ) 30 ☐

இ) 12 ☐ ஈ) 247 ☐

2. 44 ஆண்டுகள் இலங்கையை ஆண்ட தமிழ் மன்னன்

அ) பல்லவன் ☐ ஆ) அசேலன் ☐

இ) எல்லாளன் ☐ ஈ) குத்திகன் ☐

3. ''மானம் பெரிதென உயிர்விடுவர்'' எனக் கூறியவர்

அ) பாவேந்தர் ☐ ஆ) நாமக்கல் கவிஞர் ☐

இ) பாரதியார் ☐ ஈ) கணியன் பூங்குன்றனார் ☐

4. சங்கிலியனின் சிலை அமைந்துள்ள இடம்

அ) நீர்வேலி ☐ ஆ) உடுவில் ☐

இ) முத்திரைச்சந்தி ☐ ஈ) நல்லூர் ☐

5. முதன்முதலில் இலங்கைக்கு வந்த ஐரோப்பியர்

அ) ஒல்லாந்தர் ☐ ஆ) போர்த்துக்கேயர் ☐

இ) ஆரியர் ☐ ஈ) ஆங்கிலேயர் ☐

6. குணப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) நூல் ☐ ஆ) காலை ☐

இ) இலை ☐ ஈ) சிவப்பு ☐

7. வருவான் என்பது

அ) இறந்தகாலம் ☐ ஆ) நிகழ்காலம் ☐

இ) எதிர்காலம் ☐ ஈ) முடிந்தகாலம் ☐

8. காக்கைவன்னியன் என்பவனால் காட்டிக் கொடுக்கப்பட்ட தமிழ் மன்னன்

அ) பண்டாரவன்னியன் ☐ ஆ) கட்டப்பொம்மன் ☐

இ) சங்கிலியன் ☐ ஈ) எல்லாளன் ☐

9. ஒருமை, பன்மை என்பன

அ) இடம் ☐ ஆ) பால் ☐

இ) எண் ☐ ஈ) திணை ☐

10. விழுப்பம் என்பதன் பொருள்

அ) உயர்வு ☐ ஆ) தாழ்வு ☐

இ) கொடை ☐ ஈ) உணர்வு ☐

11. கீரிமலையில் அமைந்துள்ள பண்டைய சிவன் கோவில்

அ) தம்பலேச்சுரம் ☐ ஆ) திருக்கேதீச்சுரம் ☐

இ) திருக்கோணேச்சுரம் ☐ ஈ) முன்னேச்சுரம் ☐

12. பலவின்பாலுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) கிளி ☐ ஆ) அவன் ☐

இ) பந்துகள் ☐ ஈ) அவர்கள் ☐

13. விளக்கேந்திய பெருமாட்டி என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவர்

அ) அன்னை தெரேசா ☐

ஆ) அன்னை பூபதி ☐

இ) புளோரன்சு நைட்டிங்கேல் ☐

ஈ) மேரி கியூரி அம்மையார் ☐

14. கல்யாணி என்னும் இடத்தில் ______________ அரசு அமைந்திருந்தது.

அ) சங்கிலியனது ☐ ஆ) ஒல்லாந்தரது ☐

இ) இயக்கரது ☐ ஈ) நாகரது ☐

15. உயிர்மெய்யெழுத்து

அ) க ☐ ஆ) இ ☐

இ) க் ☐ ஈ) ண் ☐

16. அரசனில்லாத ______________ அச்சில்லாத தேர்.

அ) காடு ☐ ஆ) வீடு ☐

இ) நாடு ☐ ஈ) மேடு ☐

17. நெல்சன் மண்டேலா பிறந்த நாடு

அ) அமெரிக்கா ☐ ஆ) கனடா ☐

இ) அவுத்திரேலியா ☐ ஈ) ஆபிரிக்கா ☐

18. தன்மை இடப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) நாங்கள் ☐ ஆ) அவர்கள் ☐

இ) நீங்கள் ☐ ஈ) நீர் ☐

19. 'முத்தே பவளமே - என்
முக்கனியே சர்க்கரையே' எனத் தொடங்கும் பாடல்

அ) ஏர்ப்பாடல் ☐ ஆ) தொழிற்பாடல் ☐

இ) தாலாட்டுப்பாடல் ☐ ஈ) அறுவடைப்பாடல் ☐

20. 1948 இல் டி.எஸ். சேனாநாயக்கா தலைமையில் சிங்களவரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தவர்கள்

அ) போர்த்துக்கேயர் ☐ ஆ) ஆங்கிலேயர் ☐

இ) தமிழர் ☐ ஈ) ஒல்லாந்தர் ☐

21. அவை + ஐ என்பதை சேர்த்தெழுதினால்

அ) அதை ☐ ஆ) அவற்றை ☐

இ) அவர்களை ☐ ஈ) அவையை ☐

22. மடுமாதா கோவில் அமைந்துள்ள இடம்

அ) மன்னார் ☐ ஆ) வவுனியா ☐

இ) மட்டக்களப்பு ☐ ஈ) திருகோணமலை ☐

23. கன்னியா வெந்நீர்க் கிணறுகள்

அ) 5 ☐ ஆ) 3 ☐

இ) 6 ☐ ஈ) 7 ☐

24. நிகழ்காலத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) உண்டான் ☐ ஆ) உண்கின்றான் ☐

இ) உண்பான் ☐ ஈ) உண்ணவில்லை ☐

25. ''அட்டாலும் பால் சுவையில் குன்றாது''எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்ற நூல்

அ) நல்வழி ☐ ஆ) மூதுரை ☐

இ) நாலடியார் ☐ ஈ) ஆத்திசூடி ☐

26. பின்வருவனவற்றில் பொதுநிலையம் அல்லாதது

அ) வீடு ☐ ஆ) நூலகம் ☐

இ) பள்ளி ☐ ஈ) மருத்துவமனை ☐

27. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்

அ) உவகை ☐ ஆ) மகிழ்ச்சி ☐

இ) துன்பம் ☐ ஈ) களிப்பு ☐

28. புலவருக்குத் தன் தலையைக் கொடுக்க முன்வந்த மன்னன்

அ) எல்லாளன் ☐ ஆ) இரும்பொறை ☐

இ) செங்கணான் ☐ ஈ) குமணன் ☐

29. கோணேசுவரர் கோவிலைச் சுற்றி ____________ கோட்டை அமைந்திருந்தது.

அ) போர்த்துக்கேயரது ☐ ஆ) ஆங்கிலேயரது ☐

இ) ஒல்லாந்தரது ☐ ஈ) தமிழரது ☐

30. எல்லாளனின் நினைவாலயம் அமைந்திருந்த இடம்

அ) யாழ்ப்பாணம் ☐ ஆ) வன்னி ☐

இ) மட்டக்களப்பு ☐ ஈ) அநுராதபுரம் ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

வேலன் என்பவன் ஓர் ஏழை. அவன் யாழ்ப்பாணத்தில் தனது மகளுடன் வாழ்ந்து வந்தான். வேலனின் குடும்பம் வறுமையால் வாடியது. அவ்வூரிலே ஒரு புலவரும் வாழ்ந்து வந்தார். அவர் ஏழைகளுக்கு உதவும் பண்புள்ளவர். இதை அறிந்த வேலன் புலவரிடம் சென்றான். தனது ஏழ்மை நிலையை எடுத்துக் கூறி ஓர் ஆடும் ஒரு மூட்டை அரிசியும் தரும்படி கேட்டான். அதற்குப் புலவர் ''நீ கேட்டதில் ஒன்று நடக்கும்; இன்னொன்று நடக்காது'' என்று கூறினார். இதைக் கேட்டதும் வேலன் மிகவும் மனம் வருந்தினான். எப்படியாவது தான் கேட்ட இரு உதவிகளையும் நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொண்டான். அவனின் வாடிய முகத்தைக் கண்ட புலவர் ''நீ ஏன் மனம் வருந்துகின்றாய்? நான் என்ன சொல்லிவிட்டேன். நீ கேட்டதில் ஆடு நடக்கும்; அரிசி நடக்காது என்று தானே நகைச்சுவையாகக் கூறினேன். கவலைப்படாதே! நீ கேட்டதை நிறைவேற்றித் தருகின்றேன்''என்றார். வேலன் புலவரின் சொல்லாற்றலைக் கண்டு வியந்து மகிழ்ந்தவாறு பரிசுப் பொருட்களுடன் வீட்டிற்குச் சென்றான்.

1. புலவர் வாழ்ந்த ஊர் எது ?

______________________________________________

2. புலவரிடம் எவற்றைத் தரும்படி வேலன் கேட்டான்?

______________________________________________

3. வேலன் எதனைக் கண்டு வியந்தான்?

______________________________________________

4. எது நடக்கும்; எது நடக்காது எனப் புலவர் கூறினார்?

______________________________________________

5. புலவர் எத்தகைய பண்புள்ளவர்?

______________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. உள்ளத்தினின்று வெளிப்படும் இயல்புகளை எவ்வாறு அழைப்பர்?

______________________________________

______________________________________

2. ‘மூட ஆமை’ என்ற பாடல் உணர்த்தும் கருத்து யாது?

______________________________________

______________________________________

3. வவுனிக்குளத்தின் முன்னைய பெயர் என்ன?

______________________________________

4. காகிதம் எதிலிருந்து செய்யப்படுகிறது?

______________________________________

5. ஆயிரத்து எண்ணூற்றுப் பதினைந்தில் ( 1815 ) இலங்கைத்தீவு முழுவதையும் கைப்பற்றியவர்கள் யார்?

______________________________________

______________________________________

6. சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்

   பெற்றத்தாற் பெற்ற பயன்

   இக்குறளின் பொருளைத் தருக.

______________________________________

______________________________________

______________________________________

7. கி.மு 500 ஆம் நூற்றாண்டில் தென்னிலங்கையிலும் வட இலங்கையிலும் ஆட்சி செய்தவர்கள் யார்?

______________________________________

புள்ளிகள் 10

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## உதவி

| | | | | |
|---|---|---|---|---|
| நீயே | வாழ்த்த | அன்னை | என்று | உணவு |

*ஏழை மக்களுக்கு நாம்*

*என்றும் உதவிட வேண்டும்*

*உண்ண ____________ கேட்டால்*

*உவந்து கொடுக்க வேண்டும்*

*இல்லை ____________ வந்தோருக்கு*

*ஈவோர் தமைக் கண்டால்*

*நல்லாய் ____________ வேண்டும்*

*நன்றியும் கூற வேண்டும்*

*உன்னை ____________ புகழ்ந்தால்*

*ஊரார் எல்லாம் சிரிப்பர்*

*____________ போன்றே நீயும்*

*அன்பாய் வாழ வேண்டும்*

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. அ. பெயர்ச் சொற்கள் எத்தனை வகைப்படும்? ______________________

   ஆ. பின்வருவனவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

   பொருட்பெயர் :- ____________________

   இடப்பெயர் :- ____________________

2. பின்வருவனவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

   உயர்திணை :- ____________________________

   படர்க்கை :- ____________________________

   பலர்பால் :- ____________________________

3. அ. உயிர்க்குற்றெழுத்துகள் எத்தனை? ______________________

   ஆ. அவை எவை? ________________________________________

4. பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

   மன்னன் :- ____________________________________________

   கதிரவன் :- ____________________________________________

   புலவர் :- ____________________________________________

5. குழலி அழகான மாலை கட்டினாள். இச்சொல்லியத்தில் வந்துள்ள எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்பவற்றைத் தருக.

எழுவாய் :- ______________________

செயப்படுபொருள் :- ______________________

பயனிலை :- ______________________

புள்ளிகள் 15

6) **பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

ஆவிலிருந்து பால் பெறப்படுகிறது. பால் மிகவும் சத்துள்ள உணவாகும். பாலில் இருந்து கிடைக்கும் உணவுப் பொருட்களில் அதிகளவு கல்சியம் உண்டு. கல்சியம் எலும்புகள் உறுதியாக வளர்வதற்கு உதவுகின்றது. எனவே, நாம் நாளும் பாலில் இருந்து கிடைக்கும் உணவுப் பொருட்களை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 05

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

✸ **'மூடஆமை' என்ற பாடலைக் கதையாக எழுதுக.**

✸ **பிறந்தநாள்**

- உமது பிறந்தநாள், உமது குடும்பத்தினரின் பிறந்தநாட்கள்
- பிறந்தநாள் வீட்டில் நடைபெறும் செயற்பாடுகள்
- பிறந்தநாளன்று உமக்குக் கிடைக்கும் பரிசு
- பிறந்தநாள் கொண்டாடுவதை நீர் விரும்புகின்றீரா? இல்லையா?ஏன்?

✸ **நான் தமிழ் கற்கும் பள்ளி**

- தமிழ்ப்பள்ளி பற்றிய அறிமுகம்
- கல்வி கற்கும் வகுப்பு, பாடங்கள்
- ஆசிரியர் மாணவர் தொகை
- தேர்வுகள்
- தமிழ் கற்பதால் ஏற்படும் நன்மைகள்

புள்ளிகள் 20